## பாதுகாப்பு ஆணையரின் 3 நாள் ஆய்வு தொடங்கியது

# டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே விரைவில் மெட்ரோ ரயில் சேவை

■ சென்னை

சென்னை டிஎம்எஸ் - சென்ட்ரல் - வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் வழித்தடத்தில் பாதுகாப்பு ஆணையரின் இறுதிகட்ட ஆய்வு நேற்று தொடங்கியது.

சென்னையில் டிஎம்எஸ் - சென்ட்ரல் - வண்ணாரப்பேட்டை இடையே 10 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட உள்ளது. இதற்காக ஆயிரம் விளக்கு, எல்ஐசி, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்ட்ரல், மண்ணடி, வண்ணாரப்பேட்டையில் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து பணிகளும் முடிவடைந்த நிலையில், இந்த தடத்தில் மெட்ரோ ரயில் இயக்கம் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்ய ரயில்வே பாதுகாப்பு ஆணையர் (தெற்கு) ஏ.கே.மனோகரன் தலைமையிலான குழுவினர் நேற்று சென்னை வந்து ஆய்வுப் பணிகளை தொடங்கினர். முன்னதாக, செய்தியாளர்களிடம் ஏ.கே.மனோகரன் கூறியதாவது:

டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை வழித்தடத்தில் மொத்தம் 3 நாட்கள் ஆய்வு நடத்த உள்ளோம்.

புதிய தடத்தில் மெட்ரோ ரயில்கள் இயக்கம், சுரங்கப் பாதையில் அமைக்கப்பட்டுள்ள பயணிகளுக்கான பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்வோம். அதன் பிறகு, இத்தடத்தில் ரயில்களை இயக்க ஒப்புதல் அளிக்கப்படும். பின்னர், மெட்ரோ ரயில் நிர்வாகம் தமிழக அரசுடன் ஆலோசனை நடத்திவிட்டு, ரயில் சேவை தொடங்கும் தேதியை அறிவிக்கும்.

பயணிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், பயணிகள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மற்ற மெட்ரோ ரயில் நிறுவனங்களைவிட சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ் குமார் பன்சால் கூறியதாவது:

வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் இடையே 2020 ஜூன் மாதத்துக்குள் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும்.

சிக்னல் கோளாறால் மெட்ரோ ரயில் சேவை பாதிக்கப்படுவது போன்ற சில குறைபாடுகள் உள்ளன. சிக்னலில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்படுவதை உடனுக்குடன் கண்டறிந்து அடுத்த சில நிமிடங்களில் தீர்வு காண்கிறோம். இதுபோன்ற பிரச்சினைக்கு விரைவில் நிரந்தர தீர்வு காணப்படும்.

தற்போது காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு வருகிறது. சென்ட்ரல் ரயில் நிலையம் மற்றும் விமான நிலையத்துக்கு வந்துசெல்லும் பயணிகளின் எண்ணிக்கை குறித்த புள்ளிவிவரங்களை பெற்று ஆய்வு நடத்துவோம். அதன் அடிப்படையில் மெட்ரோ ரயில் சேவையின் நேரம் நீட்டிக்கப்படும்.

மெட்ரோ ரயில் கட்டணத்தை குறைக்க வாய்ப்பு இல்லை. ஆனால், குறைந்த கட்டணத்தில் வீட்டில் இருந்து ரயில் நிலையங்களுக்கு வந்துசெல்வதற்கு ஏற்ப, வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வசதி மேம்படுத்தப்படும்.

சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு கடனுதவி பெறுவது குறித்து ஜப்பானின் ஜெய்கா உட்பட 4 நிதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில், மாதவரம் - சோழிங்கநல்லூர் (36 கி.மீ.), மாதவரம் - கோயம்பேடு பேருந்து நிலையம் (16 கி.மீ.) வழித்தடங்களில் மொத்தம் 52 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்த ஜெய்காவுடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். ஜூனில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மெட்ரோ ரயில் நிறுவன தலைமை பொது மேலாளர் (சுரங்கம்) வி.கே.சிங், இயக்குநர்கள் நரசிம்மன், திரிவேதி உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.




▲ சென்னை வண்ணாரப்பேட்டை - உயர் நீதிமன்றம் இடையே மெட்ரோ பாதையில் ஆய்வு மேற்கொண்ட ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.கே.மனோகரன், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால் உள்ளிட்டோர்.